

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2026), காலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில், சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் – முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் அவர்களின் "குறிஞ்சி நலம்" தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை தொடங்கி வைத்ததோடு, அதற்கான இலட்சினையை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, எம்.எல்.ஏ., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன், துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி, மாநில மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன், டாக்டர் சொக்கலிங்கம் மற்றும் சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர் – நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

இலங்கைக்கு கடத்த வைத்திருந்த

ரூ.100 கோடி மதிப்பிலான 135 கிலோ போதைப் பொருட்கள் பறிமுதல்!

த.வெ.க. நாகை மாவட்டச் செயற்குழு உறுப்பினர் பூபாலன் கைது!

நாகை, அக்.18-

தமிழ்நாட்டில் நிர்வாக திறமையற்ற சோபா மாடல் விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சி பொறுப்பு ஏற்றது. முதல் கொலை, கொள்ளை, வழிபறி, போதைப் பொருள் கடத்தல், விற்பனை என நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் ஒன்றிய நிதி அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வருவாய் குற்றப்பிரிவு புலனாய்வு துறை திருச்சி மண்டல அதிகாரிகளுக்கு நாகையில் இருந்து இலங்கைக்கு சர்வதேச போதைப்பொருளான மெத்த பெட்டமைன் கடத்துவதாக ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து தகவல் இந்நிலையில் வந்தது. இதையடுத்து நேற்றுமுன்தினம் (16ம் தேதி) காலை 6 மணி அளவில் நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி அருகே பிரதாப ராமபுரம் நடுத்தெருவை சேர்ந்த சுகன் என்பவர் வீட்டிற்கு 16 பேர் கொண்ட அதிகாரிகள் 4 காரில் வந்தனர்.சுகன் வேளாங்கண்ணியில் தங்கும் விடுதி ஒன்றை ஒப்பந்த முறையில் எடுத்து நடத்தி வருகிறார். அதிகாரிகள் அதிரடியாக சுகன் வீட்டின் உள்ளே நுழைந்தனர். அப்போது அவர்கள் ஒன்றிய நிதி அமைச்சகத்தின் கீழ் செயல் பட்டு வரும் வருவாய் குற்றப் பிரிவு புலனாய்வு துறை அதிகாரிகள் என கூறினர். வீட்டில் போதை பொருள் வைத்திருப் பதாக தகவல் வந்துள்ளது. இதன் பேரில்

வீட்டில் சோதனை மேற் கொள்ள வேண்டும என கூறி சோதனை மேற்கொண்டனர். அந்த அதிகாரிகள் குழுவினர் சுகன் அவரது சகோதரர்கள், பெற்றோர் மற்றும் நண்பர்கள் என அனைவரிடமும் காலை 10 மணி வரை விசாரணை மேற்கொண்டனர். இதில் சுகன் வீட்டில் பதுக்கி வைத்திருந்த சர்வதேச சந்தை மதிப்பில் ரூ.100 கோடி மதிப்பிலான 135 கிலோ மெத்த பெண்டமைன் என்ற சர்வ தேச போதைப்பொருள் இலங்கைக்கு கடத்த இருந்ததை கண்டு பிடித்தனர். அவரிடம் நடத்திய விசாரணை யில் சென்னையில் இருந்து சுகன் காரில் கடந்த சில தினங்களுக்கு முன்பு மெத்த பெண்டமைன் கடத்தி வந்து வேளாங்கண்ணியில் உள்ள அன்னை கார் பார்கிங் காரை நிறுத்தி விட்டு சென்று நேற்று (16ம் தேதி) காலை காரை வேளாங்கண்ணி காந்தி செட்டி தெருவை சேர்ந்த மணி கண்டன் எடுத்துக் கொண்டு சுகன் வீட்டிற்கு வந்தது தெரிய வந்தது. மேலும் இந்த கடத்தலுக்கு மூளையாக நாகப்பட்டினம் மாவட்ட த.வெ.க. செயற்குழு உறுப்பினரும், வழக்கறிஞருமான வேளாங்கண்ணி அருகே கீழப்பிடாகை சிந்தாமணி மெயின் ரோட்டை சேர்ந்த பூபாலன் ((42) செயல்பட்டது தெரியவந்தது. இதையடுத்து பிரதாமராமபுரத்தில் இருந்து 8 பேர் கொண்ட அதிகாரிகள் பூபாலன் வீட்டிற்கு புறப்பட்டு சென்றனர். பூபாலன் வீட்டிற்கு சென்ற அதிகாரிகள் பல மணி நேரம் சோதனை மேற் கொண்டனர். 'பூபாலன் மனைவி இலங்கையை சேர்ந்தவர் என்பது விசாரணையில் தெரியவந்தது. இதை பூபாலன் தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு சுகன் போன்றவர்கள் மூலம் நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கைக்கு போதைப்பொருட்களை கடத்துவது விசாரணையில் தெரியவந்தது. காலை தொடங்கிய விசாரணை மாலை 3 மணி வரை நீடித்தது.

பூபாலன் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் கீழ்வேளூர் தொகுதியில் த.வெ.க. சார்பில் போட்டியிட விருப்ப மனு கட்சி தலைமையிடத்தில் கொடுத்திருந்தார். மேலும் தவெக சார்பில் மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு போராட்டம், கூட்டங் களில் பங்கு பெற்றுள்ளார். ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அதிகாரிகள் திடிரென சோதனை நடத்துவது குறித்து பல மணி நேரத்திற்கு பின்னர் அப்பகுதி மக்களுக்கு தெரியு வந்தது. மேலும் உள்ளூர் போலீசார் தகவல்கள் சேகரிக்க முடியாமல் அதிகாரிகள் சோதனை நடத்திய இடங்களில் தடுமாறி வந்தனர்.

மாலை 5 மணிக்கு பின்னர் வேளாங்கண்ணி அருகே சிந்தாமணி மெயின் ரோட்டைச் சேர்ந்த த.வெ.க. நிர்வாகி பூபாலன் (42).பிரதாபராமபுரம் நடுத்தெருவைச் சேர்ந்த சுகன் (27). வேளாங்கண்ணி காந்தி செட்டி தெருவை சேர்ந்த மணி கண்டன் (29), பிரதாபராம புரம் யாதவர் தெருவைச் சேர்ந்த சதீஷ் (30) ஆகிய 4 பேரை கைது செய்தனர். மேலும் பூபாலனிடம் இருந்து ரூ.30 லட்சம் மதிப்பிலான ஆடம்பர காரை பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்த 135 கிலோ மெத்தபெட்டமைன், பூபாலனிடம் பறிமுதல் செய்த கார் உட்பட 2 கார்கள் ஆகியவற்றுடன் நாகப்பட்டினம் சுங்கத்துறை அலுவலகத்திற்கு வந்தனர். முதலில் மாலை 6.30 மணிக்கு பூபாலன் அழைத்து வரப்பட்டு விசாரணை நடத்தினர். இதன் பின்னர் 8.30 மணிக்கு மற்ற 3 பேரையும் அழைத்து வந்தனர்.

அங்கு தொடர்ந்து தனித்தனியாக விசாரணை நடத்தினர். விசாரணை இரவு 10 மணி வரை நடந்தது.

இந்நிலையில் தூய கட்சியாக தம்பட்டம் அடித்துக் கொள்ளும் த.வெ.க. தனது கட்சியைச் சேர்ந்த நாகை மாவட்ட செயற்குழு உறுப்பினர் பூபாலனை கட்சியிலிருந்து நீக்குவதாக அறிவித்து அவசர அவசரமாக அறிவிப்பு வெளியிட்டது குறிப்பிடதக்கது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழக மறுசீரமைப்பு ஆலோசனைக் கூட்டம்!

தே.மதியழகன் தலைமை! ஆ.கிருஷ்ணசாமி – நாமக்கல் ப.ராணி சிறப்புரை!

கிருஷ்ணகிரி, அக். 18-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக கழக மறுசீரமைப்பு ஆலோசனை கூட்டங்கள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிகளில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் நடைபெற்றது.

கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதிக்கான கூட்டம் கிருஷ்ணகிரியிலும், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்கான கூட்டம் பர்கூரிலும், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிக்கான கூட்டம் ஊத்தங்கரையிலும் உள்ள தனியார் திருமண மண்டபங்களில் நடைபெற்றது. இந்தக் கூட்டங்களில் தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள மேலிடப்பார்வையாளர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆதிதிராவிடர் நலக்குழு மாநில செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி, திராவிட முன்னேற்றக் கழக மகளிர் தொண்டர் அணி மாநில செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் கலந்து கொண்டு கழக மறுசீரமைப்பு குறித்து தலைமை கழகத்தால் வழங்கப்பட்டுள்ள கருத்துக்களை எடுத்து ரைத்தனர்.

இந்த கூட்டங்களில் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுகவனம், வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம். வெங்கடேசன், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர்கள் சீனிவாசன், அன்பரசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி. சந்திரன், சாவித்திரி மாவட்ட பொருளாளர் கதிரவன் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திரசேகர் மற்றும் ஒன்றிய ,பேரூர் கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழக மறுசீரமைப்பு ஆலோசனைக் கூட்டம் மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு மாநில செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி, திராவிட முன்னேற்றக் கழக மகளிர் தொண்டர் அணி மாநில செயலாளர் நாமக்கல் ராணி சிறப்புரையாற்றினார்கள். இந்த கூட்டங்களில் அமைப்புசாரா ஓட்டுனர் அணி மாநில செயலாளர் செங்குட்டுவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுகவனம், வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(15.10.2026)



1. வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே கொண்ட சமுத்திரத்தில் கள்ளக்காதல் தகராறில் வழக்கறிஞரை அடித்து கொலை செய்த மூன்று பெண்கள் ...

2. மதுரை மாவட்டம் விரதனூர் அருகே முன்விரோதம் காரணமாக பைக்கில் சென்ற வாலிபர்களை விரட்டி விரட்டி வெட்டி கொடூர கொலை ஒருவர் பலி, மற்றொருவர் உயிர் ஊசல் ...

3. கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி அருகே குளத்தில் மீன் பிடிப்பது தொடர்பாக ஏற்பட்ட தகராறு காரணமாக மீனவர் சரமாரியாக வெட்டி கொலை ...

4. விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் கூனம்பட்டி அருகே இரண்டாவது திருமணத்திற்கு பெண் கேட்டதால் தகராறு தந்தை சரமாரியாக அறிவாளால் வெட்டி படுகொலை ...

5. தேனி மாவட்டம் கம்பம் அருகே தனது இரு சக்கர வாகனம் மீது மோதிய வாலிபர்களை கண்டித்ததால் ஜவுளிக்கடை வியாபாரி கத்தியால் குத்தி கொலை ....



6. விருதுநகர் மாவட்டம் கமுதி அருகே முன்விரோதம் காரணமாக மதுவை ஊற்றிக் கொடுத்து வாலிபர் சரமாரியாக வெட்டிக்கொலை ...

7. சென்னை ஆதம்பாக்கம் சாஸ்திரி நகரில் மது போதையில் கத்தியால் கழுத்தை அறுத்து கொல்ல முயற்சி ....

8. சென்னை வியாசர்பாடியில் வாகன சோதனையில் ஈடுபட்ட சப் இன்ஸ்பெக்டர் மற்றும் பெண் காவலரிடம் தகராறு செய்த ஆட்டோ டிரைவர் சிக்கினார் ...

9. கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அருகே கட்சி நிர்வாகிகள் கூட்டம் முடிந்து வீடு திரும்பிய தவெக நிர்வாகியை வழிமறித்து சரமாரியாக அரிவாள் வெட்டு ...

10. ஆம்பூர் அருகே பெண்களின் புகைப்படங்களை மார்பிங் செய்து ஆபாசமாக சித்தரித்து இணையத்தில் வெளியிட்ட வாலிபர் சிக்கினார்...

11. சென்னை மேற்கு மாம்பலத்தில் நிதி நிறுவன அதிபர் வீட்டில் பூட்டை உடைத்து 15 சவரன் தங்கம் மற்றும் 5 கிலோ வெள்ளி பொருட்கள் பணம் கொள்ளை ....



12. சென்னை தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலையில் நடந்து சென்ற இன்ஜினியரிடம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் எனக் கூறி தங்கச் சங்கிலியை பறித்துச் சென்ற வாலிபர் சிக்கினார் ...

13. திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் துத்திப்பட்டு ஊராட்சி மேல் கன்றம் பள்ளியில் கமல் சிங் என்பவர் வீட்டின் பூட்டை உடைத்து ரொக்க பணம், ஒரு லட்ச ரூபாய் மதிப்பிலான டிவி, மின் ஒயர்கள் திருட்டு...

14. சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கீளங்காட்டூர் கிராமத்தில் பொது இடத்தில் மது அருந்தி கொண்டு இருப்பவர்களை கண்டித்த போலீஸ்காரரை உருட்டுக்கட்டையால் சரமாரியாக தாக்கிய கும்பல் ....

15. மதுரையைச் சேர்ந்த வில்வித்தை வீரர் மீது பொய்யாக கஞ்சா வழக்கு பதிவு செய்த பெண் சப்இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்க ஹை கோர்ட் உத்தரவு ....



16. தென்காசி மாவட்டம் திருவேங்கடம் அருகே வாகனம் நிறுத்துவதில் தகராறு: வாடகை கார் ஓட்டுநருக்கு அரிவாள் வெட்டு

17. கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடரும் அரிவாள் வெட்டு சம்பவங்கள். தோவாளையில் பட்டப்பகலில் செல்போன் கடைக்குள் புகுந்து உரிமையாளரை அரிவாளால் சரமாரியாக வெட்டியதால் பரபரப்பு

18. த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாட்டில் ரீல்ஸ் மோகம் உச்சகட்டம் திருவண்ணா மலையில் பெட்ரோல் குண்டு வீசி ரீல்ஸ் வீடியோ எடுத்த நபரால் அதிர்ச்சி.

19. சென்னை காசிமேடு பகுதியைச் சேர்ந்த 15 வயது சிறுமியை ஆசைவார்த்தை கூறி ஏமாற்றிய தியாகு என்ற த.வெ.க. நிர்வாகி



20. வேலூர் மாவட்டம் காட்பாடியில் கூதாட்ட தொழில் போட்டி காரணமாக இளைஞர் வெட்டிக் கொலை.



திருப்பூர் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற கழக மறுசீரமைப்புக்கான திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் இல.பத்மநாபன், கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.